பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 10 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் மற்றும் வேளாண் துறை முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

- தூய்மை எரிசக்தி உற்பத்திக்கான திட்டங்கள் மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

- ஊட்டச்சத்து அடிப்படையிலான உர மானியம் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் மற்றும் வேளாண் துறை முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று நடைபெற்ற மக்கள் மன்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் மக்கள் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொழில்துறையை நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்றும், மாறாக தொழில்துறை வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்திடும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, செஷல்ஸ் நாட்டில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு கோவை வந்தடைந்த திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, தொழில்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் மாநில அரசின் பிரதிநிதிகள் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

<<<<<<>>>>>

உலக அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மை எரிசக்தி உற்பத்திக்கான பெரிய அளவிலான திட்டங்களில் இந்தியா முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சூரியசக்தி கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், லட்சக்கணக்கான இந்தியர்கள் சூரிய வழிபாட்டை அடிப்படையாக கொண்டு பண்டிகைகளை கொண்டாடி வருவது இயற்கை உடனான பிணைப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று கூறினார்.

உலக அளவில் எரிசக்தி மாற்றத்தில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, புதை படிவமற்ற எரிசக்தி ஆதாரங்களிலிருந்து 50 சதவீதம் அளவிற்கு சூரிய மின் உற்பத்திக்கான திறனை நிறுவ வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்தைவிட ஐந்தாண்டுகளுக்கு முன்னதாகவே நிறைவடைந்துள்ளது என்று திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

நான்கு நாள் நடைபெறும் இந்த சூரியசக்தி கூட்டமைப்பு மாநாட்டில் 124 நாடுகளை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

விவசாயிகளுக்கு குறைந்த விலையில் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நடப்பாண்டு ரபி பருவத்திற்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான உர மானியங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின்கீழட மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட உதவிடும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இந்த உர மானியத்திற்காக 37 ஆயிரத்து தொள்ளாயிரத்து 52 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

எட்டாவது ஊதியக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இதற்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இந்த ஊதியக்குழு 18 மாத காலத்திற்குள் தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் வழங்கும் என்று அவர் கூறினார்.

ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையிலான இக்குழுவில் பெங்களூரு ஐ ஐ எம் நிறுவனத்தின் பேராசிரியர் Pulak Ghosh பகுதிநேர உறுப்பினராகவும், மத்திய பெட்ரோலியத்துறை செயலாளர் திரு பங்கஜ் ஜெயின் உறுப்பினர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சென்னை, திருவள்ர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(voice Byte – செந்தாமரை கண்ணன் 38 Sec. )

இதனிடையே, ஆவடி, திருவள்ளூர், திருநின்றவூர், பொன்னேரி ஆகிய பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக அப்பகுதியில் உள்ள நீர்நிலைகள் விரைவாக நிரம்பி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte –தனசேகரன் - 43 Sec. )

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணை விரைவாக நிரம்பி வருவதையடுத்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருவதால், கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – குமார் – 45 Sec. )

இந்நிலையில், வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் மணிக்கு 15 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும், ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்றிரவு கரையை கடக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மச்சிலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையே புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 90 முதல் 110 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*நெல்லை மாவட்டத்தில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான கலைப்போட்டிகளை தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தொடங்கிவைத்தார்.*

-------------

*வேலூர் மாநகராட்சியில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளை ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி, பல்வேறு இடங்களில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களையும் பார்வையிட்டார்.*

-------------

*தமிழகத்தில் தற்காலிக ஹஜ் ஆய்வாளர் பணிக்கு அடுத்த மாதம் 3-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.*

---------------------

*நாமக்கல் அரசு கலைக்கல்லூரியில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் திரு பிரபு தலைமையில் இன்று நடைபெற்றது.*

*<<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.*

*ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியாவின் அமீர் அகமத் பட், தங்கப்பதக்கமும், மனீஷ் நர்வால் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

---------

*ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Cindrella – Arya Sarthak இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை 11-13, 11-5, 12-10, 11-13, 11-9 என்ற செட் கணக்கில், கொரிய இணையை வென்றது.*

*<<<<<END>>>>>*